உ

சிவமயம்.

மதுரை

மீனாட்சியம்மன் பதிகம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

சிவமயம்.

மீனாட்சியம்மன் பதிகம்.

நேரிசை-வெண்பா.

பொற்பாரமண்டபஞ்சூழ் பொற்றாமரைக்கரைவாழ்
கற்பகநேர்சித்திக் கணபதியே விற்பனஞ்சேர்
அற்புதநம்மீனாட்சி யம்மைதனக்கின்பமுற
நற்பதிகம்பாடவரம் நல்கு.

எழுசீர்க்கழிநெடிலடி இரட்டையாசிரிய விருத்தம்.

பூமின்வளரீரேழு பதினாலுபுவனமும்
போற்றியே தொழுதுபணியும்
பொன்னளினபாதமுங் கனிவாயும்வதனமும்
பொற்பு நயனப்பார்வையும்
சாமிகணபதிதனைப் பெற்றசுவையமுதமரு
டன்னிய விசாலவடிவுந்
தவராஜர்புவிராஜர் கவிராஜர்பேரினிற்
றயவுசே ரபையாஸ்தமும்
நேமிமாநீறமுற்ற மரகதசொரூபமும்
நிறைவுடன் பிரசன்னமாய்
நேசம்வைத்தெந்தன்முன் றோன்றுசௌபாக்கியமீ
னித்தியகல்யாணி யுமையே

வாமிமதன்மாமிசிவ காமியபிராமியுன்
மைந்தனு யெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. (க)
மாலைசந்த்ராரஞ் சரப்பளிபதக்கம்வை
டூரியநுகர் சுட்டியும்
மௌலிமணிமகுடம் புலாக்குமூக்குத்திதிரு
மங்கிலியமுஞ் சிமிக்கி
ஓலைநவமணிவிசிரி முருகுபட்டங்காறை
யுபர்கங்கணமு மோதிரம்
ஒட்டியாணமெட்டு பாடகந்தண்டைகொலு
சொலிகிண்கிணிச் சரிகையாற்
சேலைபீரவிக்கை மணிந்துசெங்குங்குமத்
திலதமிட்டு விசித்ரமாய்ச்
செகஜோதியாகச் சொலிக்கச்சிறப்புற்ற
திவ்வியகுணசிந்தாமணி
வாலையனுகூலிதிரி சூலிகிருபாலியுன்
மைந்தனு மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. (உ)
பாடலபிநயகீத தேவதாசிகள்வந்து
பரதநடனம் புரிவதும்
பதினெட்டுவாத்திய முழக்கமும்வருடமோர்
பனிரண்டு திருவிழாவுஞ்

சோடசோபசார நைவேத்தியமகத்துவமுஞ்
சுக்ரவாரச் சேவையுந்
தோத்திரஞ்செய்தன்பர் கொண்டாடிநிற்பதுந்
துவாதசாந்த ஸ்தலமெனும்
ஆடலறுபத்துநான்கு புரிதிரிகூடலாம்
ஆலாட்சியாச் சேத்திரமும்
ஐந்துமாபாதகவி மோசனஞ்செய்யிரண்
டாறுதீர்த்தத்தின் வளமும்
மாடமாளிகைகூட கோபுரவிசேடமும்
மைந்தனுன் சொல்லவெளிதோ
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே (௫)
கோமளமதாகவுக்கிரப் பாண்டியன்றனைக்
கொஞ்சிமடி மீதில்வைத்து
கொங்கையிநிரித்திப் பதானபாலமுதங்
கொடுத்தபார் பதிவராகி
சாமளநிறப்பதும நாபனீசகோதரீ
சாம்பீன தச்சபைதனிற்
சப்தசுரதாளமொடு ருத்ரனுடனிர்த்தமிடு
சத்திமாதங்கி கௌரி
யாமளீசமஸ்தமுந் தானனலோகநா
யகிமகிட சங்காரிநீ
ளவிடக்கூடாத வறுபத்துநாற்கலைக்
யானவித்தைக ளுணர்ந்த

மாமணிசிகாமணி சிரோன்மணி பனேன்மணியுன்
மைந்தனு மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. (௪)
ஆரிசோழன்சேர னுக்குமேலானமல
யத்துவசன் வளர்புத்ரியா
யாங்காரமும்முலைத் தடாதகைமகடூஉ
வாயலங்கிர்த சோடினைத்
தேறின்மீதேறிரத கஜதுரகபதா
திகளெனுஞ் சேனையுடனே
திக்குவிஜயஞ்செய்து பட்டாபிஷேகமாய்ச்
செங்கோல்செலுத்திநாளும்
பாரினிற்கொண்டாட ராச்யபரிபாலனம்
பண்கின்ற ராஜேஸ்வரி
பரமசிவசொக்கநாதக் கடவுள்பாரியாய்ப்
பக்கமதிருக்கு மணியே
பாரிசிவநாரியுப காரியதிகாரியுன்
மைந்தனு மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. (ரு)
தந்தைதாய்க்குப்புத்ர னகச்சனித்துவித்
தரணிதனிலே பிறந்து
தவழ்ந்தடிநடந்துவிளை யாடத்தெரிந்தபின்
சனிசெய்த கொடுமைதானோ

விந்தையாய்வருமைபிணி பீடைநோய்யனுகினும்
விடமான விலைமாதரை
மேவியதிலும் பிரபஞ்ச வாழ்க்கையதிலும்
மெலிந்தகுரு பரதேவதா
சிந்தனையிலாமலும் பெரியோரிடத்திற்
சினேசிதஞ் செய்துகன்னி
செல்வப்பொருள்களைத் தேடாமல்வீணாட்
செறுத்தினே னிதுவரையினி
வந்தமிடிதொந்தரவை ரெந்தவிதிமுந்தொலையுன்
மைந்தனை யுகந்தாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. (அ)
ஜென்மித்தநான்முதற் கொண்டுமைமபம்மணி
செல்வத்தை யானறிகிலேன்
தேர்ந்தவிற்பன்னர்சம் பாஷணைகள்செய்து
செந்தமிழ்முதற் கற்கிலேன்
உன்மத்தமாய்கெட்ட மிஷ்டரிஷ்டம்பண்ணி
யும்பஞ்ச பாதகத்தில்
ஒருகுற்றமாகிலுஞ் செய்திரேன்மனதார
வூழ்வினைப் பயனென்னமோ
மன்கத்தினுல்வந்த துன்பத்தை முன்செய்த
கதைகாரணம் போலவே
விடமில்லாமனின் னிடமுறைத்தேனெனது
கவிதனை யகற்றுமம்மா

மன்முதததமிழ்க்கள் சுகிர்தத்தையும்வளர்த்ததாம்
மைந்தனை மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. (எ)
அஞ்சிடநடுக்கடக் கப்பல்விட்டெழுகாத
மாதாரமின்றி யோடி
அலையின்றுரும்புபோ லுலைவாயின்மெழுகென
வலைந்துருகு பாவனையதாய்த்
தஞ்சம்வேறில்லாம லுன்னடைக்கலமெனத்
தற்காறிவ்வேளை யென்று
சன்னிதானந்தனிற் ரூபந்தமாகிய
சரித்திரம் விரித்துரைத்துங்
கொஞ்சமாவதிரக்க மில்லாததென்னபிழை
குற்றமென் றேதுகையமலை
குதித்தபரை நீலியபிராணியாபாசாங்
குசத்தியாகிலு முனைவிடேன்
வஞ்சமதுநெஞ்சினிற் பொஞ்சாதேபஞ்சையுன்
மைந்தனை மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே (அ)
பில்லிவஞ்சனையேவல் சூனியம்பூதப்
பிசாசுமுனி யெதிர்வராமற்
பிரமித்திசரணமென் றேடவுமேமனோர்
பிராணபய மில்லாமலும்

சல்லியஞ்சச்சரவு சத்ராதிகள்கோடி
சனிக்கலி யணுகாமலுஞ்
சஞ்சலாவஸ்தைபிணி விசனமதுறுமலுஞ்
சற்சனர்க ளிகழாமலும்
மெல்லிமையுடன்மன நினைத்ததுகைகூடவு
மிக்கிர்பைசெய் விக்ஞாபனம்
வினவினேனின்றமுத லென்றைக்கும்ரட்சிக்க
வேண்டுமுக் கண்ணிதேவி
வல்லிபிரபல்லியச் செல்வியென்றல்லியுன்
மைந்தனை மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. (கூ)

மாமேவுநிகரான நவநிதி குபேரனிட வாழ்வுபோ லென்றனக்கு, மட்டடங்காதநிதி யஷ்டைஸ்வரியமும் வள்ளலெனவே யீகையுஞ், சகமதி லிகப்பரசாதனஜென் மசாபல்லிய தமிழ் சமஸ்கிர்த நூற்களுஞ், சதிரான சா லோக சாமீபசாரூப சாயுச்யபதவியதுவுஞ், சுகமாகுமி குசகல சாம்பிராச்யபோகஞ் சுகித்துநீ டூழிவாழ்கச் சுப சோபனப்பதிக மாயிப்ரபந்தந் துதித்தேன் வரங்கொடு த்து, மகிமைதிகழுகமகிழ மிகவிருதுசமயமுன் மைந்த னைமெனையாளுவாய் மதுவமிர்த காமாட்சி பதிவிர்தை விசாலாட்சி மதுரைநகர் மீனாட்சியே (ய)

மீனாட்சியம்மன்பதிகம்-முற்றிற்று

——(*)——